சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.27.01.2025
OS.No.26/2022
PW1 : கலையரசி (வயது 55 ) க/பெ. முருகன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு கு.வி</u>**

இந்த வழக்கின் பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள். அதனால் அவர்களை எனக்கு தெரியும்.வழக்கில் தாக்கல் செய்துள்ள ஈட்டுகடன் பத்திரத்தை 12.10.2009 ஆம் தேதியன்று எழுதி கொண்டோம். ஈட்டுகடன் பத்திரம் மூலம் ரூ.4 லட்சம் தொகையை ரொக்கமாக கொடுத்தேன். நான் வீட்டுகுடித்தனம் செய்கிறேன். ரூ.4 லட்சம் பணம் எனக்கு எனது வீட்டுக்காரர் கொடுத்தது. எனது கணவர் கட்டிட காண்ட்ராக்ட் தொழில் செய்பவர். ஈட்டுக்கடன் பத்திரத்தை ராதா எனக்கு எழுதி கொடுத்துள்ளார். ராதா 2017 ல் இறந்து விட்டார். ராதா உயிருடன் இருக்கும்போது ஈட்டுக்கடன் பத்திர தொகையை திரும்ப கொடுக்குமாறு ராதாவிடம் கேட்டேனா என்றால் பலமுறை கேட்டுள்ளேன். 2009 லிருந்து 2017 க்குள் ஈட்டுக்கடன் தொகை கேட்டு ராதாவிற்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. ஈட்டுக்கடன் பத்திரத்தின் கெடுகாலம் 4 மாத காலம். ராதாவிற்கு கடன் கொடுத்தது போல் நான் வேறு யாருக்கும் கடன் கொடுத்ததில்லை. குடும்ப பிரச்சனைக்காக ராதா என்னிடம் பணம் கேட்டார். ராதா உயிருடன் இருக்கும்போதே ஈட்டுக்கடனுக்கான முழு தொகையையும் திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. ராதா கடனை திருப்பி கொடுத்துவிட்டதால் தான் 2022 வரை நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. ஈட்டுக்கடன் பத்திரத்தில் கண்ட சொத்து தற்போது ராதாவின் மனைவி 1 ஆம் பிரதிவாதி விஜயாவின் அனுபவத்தில் உள்ளது. ஈட்டுக்கடன் பத்திரத்தில் கண்டுள்ள 4 மாத கால கெடுவிற்கு முன்பு சட்ட நடவடிக்கை நான் எடுக்காத காரணத்தினால் தாவா வழக்கு நிலைநிற்க தக்கதல்ல என்றால் சரியல்ல. அதே போல் 2009 லிருந்து 2022 வரை ஈட்டுக்கடன் தொகையை திரும்ப

பெறுவதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கான தகுந்த காரணத்தை வழக்கில் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. வழக்கை காலம் தாழ்த்தி தாக்கல் செய்துள்ளதால் வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ராதா உயிருடன் இருந்த காலத்திலேயே கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றும் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் காலம் தாழ்த்தி ராதா இறந்த பின்பு தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>** - இல்லை.

/signed/
கலையரசி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி